நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 111/2023**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | விஜயா |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள் |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 40 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 17–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.10PM )

1. நான் தற்போது கொளத்தூர் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் தடம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மாலை 6 மணி அளவில் நான் கடையில் இருந்தேன். என்னுடைய மகனும் அப்பாவும் எதிரிகளுக்கும் இடையே

சண்டை நடந்ததாக சொன்னார்கள். நான் கடையில் இருந்து வந்து பார்த்தபோது எனது அப்பாவுக்கு மண்டை உடைந்து இருந்தது. எனது மகனுக்கு வலது கால் முழங்காலில் சவ்வு கிழிந்து இருந்தது. நான் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் எழுத்துபூர்வமாக புகார் கொடுத்தேன். அதில் உள்ள கைரேகை என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.( **புகாரில் உள்ள கைரேகை மட்டும் அ.சா 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. சம்பவம் நடந்த அன்று இருட்டாக இருந்ததால் யார் தடியில் அடித்தார்கள் என்று தெரியவில்லை. யார் கத்தியில் அடித்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் காண்பித்த கத்தியை இது பற்றி எனக்கு தெரியாது என்று கூறிகிறார். போலீசார் என்னை விசாரித்தனர்.

சாட்சி அரசு தரப்பிற்கு பகுதி ஆதரவாக சாட்சியம் அளித்த நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

3. எனது வீட்டிற்கு அருகில் எதிரி சின்னபொன்னு குடியிருக்கிறார் என்றால் சரிதான். எங்கள் இருவருக்கும் 10 வருடங்களாக தடப்பிரச்சினை இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் சண்டை நடநத் சமயத்தில் என்னுடைய கடையில் இருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய மகன் அவருடைய மனைவி மற்றும் எனது அப்பா அனைவரும் சம்பவத்து அன்று வீட்டில்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். சண்டை நடந்த சமயத்தில் சின்னபொன்னு அவருடைய உறவினர்களுக்கு போன் செய்து வரச்சொன்னார்களா என்றால் ஆமாம். முருகன் மற்றும் அவருடைய நண்பர்கள் அனைவரும் வந்தார்கள். எதிரிகள் அனைவரும் எனது மகனை கெட்ட வார்த்தையால் திட்டியதை தெரியுமா என்றால் தெரியாது. சத்தம் கேட்டு சம்பவ இடம் வந்தபோது எதிரிகள் என்னை திட்டினார்களா என்றால் நான் வரும்போது அனைவரும் மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம்.

4. முருகன் என்னுடைய ஜாக்கெட்டை கிழிக்க வந்தபோது எனது அப்பா சீரங்கன் தடுத்ததால் முருகன் தடியால் மண்டையில் அடித்து விட்டார் என்றால் நான் கீழே விழுந்ததால் ஜாக்கெட் கிழிந்து விட்டது. எனது அப்பாவை முருகன் அடித்தை நான் பார்த்தேன். சவுந்தர்ராஜனை யார் கீழே தள்ளினார்கள் என்று தெரியாது. கத்தியை காட்டி யார் மிரட்டினார்கள் என்றால் காரில் வந்தவர் தான் என்னை மிரட்டினார். எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இந்த கத்தியை காட்டிதான் எதிரிகள் மிரட்டினார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் சம்பவத்தை முழுமயையாக பார்க்கவில்லை . என் அப்பாவை அடிக்கும்போது தான் நான் அங்கு வந்தேன். சம்பவம் நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். என் அப்பாவை முருகன் தான் அடித்தார் நான் பார்த்தேன். சண்டை முடிந்து அரை மணி நேரம் கழித்து தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு இருந்த நப்ர்கள் தான் போலீசுக்கு சொல்லிதான் புகார் கொடுத்தேன். புகாரை நான் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை. சம்பவ இடத்திற்கு வந்து எழுதி வாங்கி கைரேகை பெற்று சென்றார்கள். எத்தனை கை ரேகை போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ இடத்திற்கு அரை மணி நேரம் கழித்து நான் போகும் போது சுமார் பத்து நபர்கள் அங்கிருந்து இருப்பார்கள். இந்த வழக்கு போட்டால் தான் தலைவலி பிரச்சினை முடியும் என்றுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் சந்து பிரச்சனையை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் புகார் அளித்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-01.42PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**